செய்தி வெளியீட்டு எண்.823 நாள்:11.11.2009

# மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் நகராட்சி நிர்வாகத்துறையில் பணி நியமன ஆணைகளையும் மதுரை மாநகராட்சி அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கினார்.

இன்று (11.11.2009) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறையில் புள்ளி விவர குறிப்பாளர்களுக்கான பணியாணை, பேறுசார் மற்றும் குழந்தைகள் நல திட்ட பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயித்து பிறப்பிக்கப்பட்ட நியமன ஆணை மற்றும் மதுரை மாநகராட்சி அலுவலர்களுக்கு இரண்டாவது வைகை குடிநீர்த் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவுக்குள் நிறைவேற்றியமைக்காக பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

## புள்ளி விவரக் குறிப்பாளர்களுக்கான பணி ஆணை:—

அரசின் மக்கள் நலத்திட்டங்களை விரைந்து நிறைவேற்றிடவும், அத்திட்டங்களின் பலன்கள் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடையும் வகையிலும் நிர்வாகத் திறனை மேம்படுத்தவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த வகையில் அரசுப் பணிகளில் புதுப் பதவிகளை ஏற்படுத்துவதிலும், ஏற்கனவே உள்ள காலிப்பணியிடங்களை நிரப்புவதிலும் முனைப்புடன் கவனம் செலுத்தி வருகிறது.

நகராட்சி நிர்வாகத் துறையில் கடந்த 3 ஆண்டுகளில் 6876 காலிப் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் மின் ஆளுமையை முழுமையாகச் செயல்படுத்திடவும், அனைத்துப் பணிகளையும் கணினிமயமாக்கி பொதுமக்களுக்குச் சேவை செய்திடவும் புள்ளி விவரக் குறிப்பாளர் பதவிகளை பூர்த்தி செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் நகராட்சி நிர்வாகத் துறையில் காலியாக இருந்த புள்ளி விவரக் குறிப்பாளர் பதவிகளுக்கு அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தேர்வு நடத்தப்பட்டு மொத்தம் 67 பதவிகளுக்கான நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் ரூ.5200—20200+2000 என்ற காலமுறை ஊதியத்தில் நியமிக்கப்பட்டு இன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பணியாணைகளை வழங்கினார்.

## பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத் திட்ட பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயித்து நியமன ஆணை:—

மேலும், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் மேலூர், திருமங்கலம், உசிலம்பட்டி, சின்னமனூர், போடிநாயக்கனூர், தேனி அல்லிநகரம், பெரியகுளம் மற்றும் கம்பம் ஆகிய

நகராட்சிகளில் பேறுசார் மற்றும் குழந்தைநல திட்டத்தினைச் செயல்படுத்திட அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு நகர சுகாதார மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுதல், குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை செயல்படுத்துதல், நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல் மற்றும் மத்திய மாநில அரசுகளின் பல்வேறு சுகாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நகர் மையங்களில் 57 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியம் பெற்று பணியாற்றி வந்தனர். இப்பணியாளர்களை காலமுறை ஊதிய விகிதத்தில் நியமிக்க வேண்டுமென பெறப்பட்ட கோரிக்கையினை அரசு கருணையுடன் பரிசீலித்து ஒரு மருத்துவ அலுவலர் உள்பட 55 பணியாளர்களுக்கு கால முறை ஊதியம் வழங்க 12.10.2009 அன்று தமிழக அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் காலமுறை ஊதியத்தில் நியமனம் செய்து பிறப்பிக்கப்பட்ட ஆணையினை சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று நேரில் வழங்கினார்கள்.

<u>மதுரை மாநகராட்சி அலுவலர்களுக்கு இரண்டாவது வைகை குடிநீர்த் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவுக்குள் நிறைவேற்றியமைக்காக பாராட்டுச் சான்றிதழ்:–</u>

மதுரை மாநகரத்தில் குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்திட ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டாம் வைகை குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் நவீன தொழில் நுட்பத்துடன், மதுரை மாநகராட்சிப் பொறியாளர்களால் வடிவமைப்பு செய்யப்பட்டு ரூ. 72.20 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம், திட்டகாலத்திற்குள்ளாகவே நிறைவேற்றப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இந்த சீரிய சாதனையைப் பாராட்டி சிறப்பாகப் பணியாற்றிய மதுரை மாநகராட்சி ஆணையர், மதுரை மாநகராட்சித் தலைமைப் பொறியாளர் உள்பட 11 அலுவலர்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் டாக்டர். நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் முனைவர். ப.செந்தில்குமார், இ.ஆ.ப., மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை உயர் அலுவலர்களும் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.